போட்டி

அர்மீனிய மக்களின் மரபு கதை

மொழிபெயர்ப்பு

அனுமிதா



ஓவியர் நொன்னி

இருகொள்ளையர்கள், ஹமயாக் மற்றும் ஹராஹாட், ஒரு மாதுளை மரத்தின் கீழ் தற்செயலாக சந்திக்கிறார்கள், இருவருக்குமே மதிய உணவுக்கானநேரம் அது. அவர்கள் டிஃபின் பெட்டிகளில் ஒரே மாதிரியான உணவுகள் இருப்பதைக் கண்டு வியந்தாலும் இதை தயாரித்தவள் யார் என்று புரிந்துக்கொள்ள அதிகநேரம் எடுக்கவில்லை. இருவரும் நிச்சியதார்த்தம் செய்துக் கொண்டிருந்த ஒரே பெண் எலிஸாதான் அவள்.


இரு திருடர்களும் விட்டுக் கொடுக்க தயாராக இல்லாததால், இருவரில் எவன் தன் தொழிலில் அதிக திறமையுள்ளவன் என்று நிரூபிக்கின்றானோ அவனே வெற்றியடைவான் என்று ஒரு போட்டிவைத்து, அதற்கான பரிசு எலிஸா என்றும் ஒத்துக்கொண்டார்கள். இந்த சோதனை உண்மையிலேயே திருடர்களுக்கான சோதனை. ஆனால் இதன் முடிவு கொள்ளையர்கள் நினைத்ததும் இல்லை, வாசகர்கள் எதிர்பார்த்தும் இல்லை.






மலைகள் மேல், உயரத்தில், எர்ஸிங்கா என்ற கிராமத்தில், ஹமயாக், ஹராஹாட் என்றழைக்கப்பட்ட இரு கொள்ளைக்காரர்கள் வசித்து வந்தார்கள். ஹமயாக் தன் திருட்டு தொழிலை பகலில் முடித்துவிட்டு, தான் திருமண ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கும் எலிஸா உடன் மாலை பொழுதைக் கழித்தான். உண்மையில், ஒருவனுக்கு மற்றொருவனை தெரியாத போதிலும், இருவருடைய திருமணமும் எலிஸாவுடன் நிச்சயக்கப்பட்டிருந்தது. ஹராஹாட் இரவில் கொள்ளையடித்துவிட்டு வந்து, தன் வருங்ககால மனைவியுடன் பகலில் இருந்தான்; அவள் பெயரும் எலிஸா.









ஒருமாலையில், ஹமயாக் எலிஸாவுடன் இருந்போது, ஹராஹராட் அவளுக்காக செல்வத்தைத் தேடுவதில் இறங்கியிருந்தான்; அப்போது, இருவருமே தங்களுடைய வருங்காலத்தைப் பற்றி யோசித்தார்கள். அடுத்த மாகாணதில் தங்கள் அதிர்ஷ்ட்த்தை முயற்சிக்க வேண்டிய நேரம் இப்போது வந்து விட்டது என்று முடிவு செய்தார்கள். ஆண்கள் அதற்கான முன்னேற்பாட்டை செய்ய, எலிஸா ஒவ்வொருவருக்கும் பயணத்திற்கான ஒருடிஃபின் பெட்டியைக் கொடுத்தாள்.



பகலில் வேலை செய்யும் ஹமயாக் எப்போதும் போலவே
அதிகாலையில் கிளம்பிவிட்டான். தவாறாமல் இரவுக்கு முன்பே சேரவேண்டும்என்று, ஹராஹாட் தான் போகவேண்டிய இடத்திற்கு சில நிமிடஙகளுக்குள்ளேயே, வெளியேறிவிட்டான். இரண்டு கொள்ளைக்காரர்களுமே, மதிய உண்விற்காக, ஒரு மாதுளை மரத்தின் கீழ் நின்ற போது சந்தித்துக் கொணடனர். ஒருவருக்கொருவர் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு, எலிஸா அவர்களுக்குக் கட்டிகொடுத்திருந்த நண்பகல் உணவை பார்க்க தங்கள் டி்ஃபின்பெட்டிகளைத் திறந்தனர்.

ஹமயாக், தன் டிஃபின் பெட்டியிலிருந்து சீஸ் மற்றும் ஆலிவ்களை வெளியில் எடுத்தும், ஹராஹாட் அதையே தன் பெட்டியிலிருந்து எடுத்தான். அவன், உலர்ந்த இறைச்சியின் ஒரு சிறிய ஜாடியை வெளியே எடுக்க, ஹமயாக் அவ்வாறே செய்தான். கூடுதலாக, இரண்டு டிஃபின் பெட்டிகளிலும் ஒரு தக்காளி, மூன்று ஸ்காலியன், நான்கு பெரிய பாதாமி பழங்களும் இருந்தன.





தற்செயலாக, எதிர்பாராத நடந்த இந்த சம்பவத்தால் கொள்ளையர்கள் ஆச்சரியப்பட்டதோடு, தங்ககளுக்குள் ஒரு பொதுவான பிணைப்பையும் உணர்ந்தார்கள். ஒன்றாக பயணத்தைத் தொடர்ந்து, தங்கள் வாழ்க்கையை ஒப்பிட்டுக்கொண்டனர்.

"நான் புத்திசாலித்தனத்தால் என் வாழ்க்கையை சம்பாதிக்கிறேன்." என்றான் ஹமயாக்.

“நானும் அப்படிதான்”.

நான் ஒரு கொள்ளைக்காரன் என்பதை உங்களிடம் சொல்லுகிறேன்“ என்றான் ஹமயாக்.

“என் தொழிலும் அதுவேதான”.

"நான் எர்ஸிங்கா கிராமத்திற்கு மேலே உள்ள மலையில் வசிக்கிறேன்" என்றான் ஹமயாக்.

“நான் வசிக்கும் இடமும் ஆதுவேதான்”.

“எங்கள் மலைகளில் மிக அழகான பெண்ணான எலிஸாவுடன் என் திருமணம் நிச்சியப்பட்டிருக்கிறது “

“எனக்கும் எலிஸாவுடன் நிச்சியப்பட்டிருக்கிறது”

"இல்லை, என்னுடன் தான்." என்று விடாபிடியாக ஹமயாக் வலியுறுத்தினான்.

இருவரும்,உண்மையைக் கண்டுபிடிப்பதற்கு வெகுநாட்களுக்கு முன்பே, உணர்ச்சி வசப்ப்பட்டு, தங்க்ள் பெண்ணை வர்ணித்தார்கள்.

“எங்கள் மலையிலேயே நீங்கள்மோசடி செய்து, எங்களை ஏமாற்றுவதை நான் ஆமோதிக்க மாட்டேன்; ஆனால் என் வருங்கால மனைவியை நீங்கள் திருமணம் செய்து கொள்ளவது நிச்சயமாக நடக்காது!” என்று ஹமயாக் கூறினான்.


"ஆனால் அவள் என்னுடையவள்!“, ஹராஹாட் கூச்சலிட்டான், இரண்டு கொள்ளையர்களும் கோபம் தங்கள் பிரச்சினையை தீர்க்காது என்பதை உணரும் வரை, இபடியாக விவாதம் தொடர்ந்தது.

நம் இருவரையும் ஏமாற்றும் இந்த அழகி, நம்மில் ஒருவனை விட்டுவிட வேண்டும், அது யாராக இருக்கும் என்பதை நாமே தீர்மானிப்போம்.” மிக்க தன் நம்பிக்கையுடன் ஹமாயக்,ஹராஹாட் இருவருமே ஒப்புக் கொண்டனர். அவர்களில் யார் இந்த மலைகளில் புத்திசாலித்தனமான திருடன் என்று பார்க்க ஒரு போட்டி நடத்த முடிவு செய்தனர். வெற்றியடைபவன் எலிஸாவை திருமணம் செய்து கொள்வான்.

அவர்கள் நகரத்திற்குள் நுழைந்தபோது வெளிச்சத்துடன் இன்னும் பகல் நேரமாக இருந்ததால், ஹமாயக் முதலில் போட்டியில் இறங்கினான்.. ஒரு சிறிய மூட்டையுடன் ஒரு நபர் நகைகடையை நோக்கி நடந்து செல்வதை இருவரும் கவனித்தனர். ஹமயாக் அந்த மூட்டையை சாமார்த்தியமாக அவரிடமிருந்து அபகரித்துவிட்டான். அதில் நகைகள் இருப்பதைக் கண்டதும், விரைவாக அவைகளை எடுத்துவிட்டு, கற்களை நிரப்பி   அந்த மூட்டையை அந்த மனிதரிடம் திருப்பித் தந்தான்.

மூட்டையை திறந்த போது மனிதர், நகை கடைக்காரர் இருவருமே ஆச்சரியப்பட்டார்கள் என்று சொல்லத் தேவையில்லை. அந்த மனிதர் முகம் சிவந்து, சில வார்த்தைகளை முணுமுணுத்துக் கொண்டே, மூட்டையை எடுத்துக் கொண்டு கிளம்பினார். அந்த மனிதர் வீட்டிற்கு விரைந்து போகும் போது, ஹமாயக் மீண்டும் அவரிடமிருந்து மூட்டையை அபகரித்து கற்களை எடுத்துவிட்டு, நகைகளை மறுபடியும் அதில் போட்டு, மூட்டையை அவரிடம் திருப்பிக் கொடுத்தான்.

.இரண்டு கொள்ளையர்களும், சிரித்துக் கொண்டே, தங்கள் தந்திரத்தின் முடிவுகளைக் காண அந்த மனிதரைப் பின்தொடர்ந்தனர். திருடரகள், அந்த மனிதன் தன் மனைவியிடம் கோபத்துடன் கடுமையாக பேசியதை ஜன்னல் வழியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ,
அவள் மூட்டயைத் திறந்து பார்க்க அதில் நகைகள் இருந்தன .“நீங்க எதை பற்றி சொல்கிறீர்கள்” என்று கேட்டு விட்டு, “நான் ஏன் நகைகளுக்குப் பதிலாகக் கற்களைக் கொடுப்பேன்?” என்று கூறினாள்.
.




குழப்பமடைந்த அந்தமனிதர் மூட்டையைக் கட்டிக்கொண்டு மறுபடியும் நகை கடைக்குக் கிளம் பினார். ஆனால் ஹமயாக் விடவில்ல; திரும்பவும் அந்த் மூட்டையிலிருந்த நகைகளை லாகவமாக எடுத்துவிட்டு, அதில் கற்களைப் போட்டுவிட்டான். இருவரும் என்ன நடக்கப் போகிறது என்று பார்க, அவரை பின்தொடர்ந்தார்கள். மூட்டையைத் திறந்தபோது, பாவம், அந்த மனிதர் அதிர்ச்சியடைய, நகைக்கடைக்காரர் தனது பொறுமையை இழக்கத் தொடங்கினார். அந்த நபர் கல் மூட்டையை எடுத்துக்கொண்டு கடையில் இருந்து ஓடினார்.

திருடர்களுக்குச் சிரிப்பை அடக்கமுடியவில்லை. ஹமயாக் விடுவதாகஇல்லை. கற்கள் திரும்பவும் நகைகளாக மாற, அந்த மனிதர் வீட்டிற்குள் திரும்பி வந்து தன் மனைவியிடம் கோபத்துடன் கத்தி பேசியதால் அவருக்கு ஒரு பயனும்இல்ல; ஏனென்றால், அவர் ஒரு முட்டாள் மாதிரி ந டந்துக் கொள்கிறார் என்று அவள் மீ ண்டும் நிரூபித்தாள்.

எனவே அந்தமனிதன் மூன்றாவது முறை, கடையை நோக்கி கிளம்பினான். மூன்றாவது முறையாக ஹமயாக், நகைகளுக்குப் பதிலாக கற்களை வைத்தான். அந்த மனிதர் கடைக்கு போனதும், மூட்டையைப் பிரித்தால் கறகளாக இருந்தன. கடை சொந்தகாரர், தன்னை எதற்கோ கேலி செய்கிறான் இவன் என்று நினைத்து, தன் கடையிலிருந்து வெளியேற்றி விட்டார். “இனிமேல் எப்பொதுமே இங்கு வராதே”, என்று கத்தி துரத்திவிட்டார். முடிவில், நகைகள் ஹமயாக் இடம் இருந்ததால், அந்த மனிதர் திரும்பி செல்லவேண்டிய அவசியமில்லை.


“இரவின் இருட்டு படர தொடங்கிவிட்ட்து” என்று தனது தோழரிடம் கூறிய ஹமயாக். "நீங்கள் எவ்வளவு புத்திசாலி என்று பார்த்துடுவிடலாம்” என்று சவால்விட்டான்.

ஹராஹாட் சில கூர்முனைகளையும், ஒரு சுத்தியயையும் கண்டுபிடித்து, ஹமயாகை இஷ்கானின் அரண்மனைக்கு அழைத்துச் சென்றான். தனது தோள்களில் ஹமயாகை உட்காரச் சொல்லி, இருவரும் ஈட்டிகளை சுத்தியால் அடித்துக் கொண்டே அரண்மனைச் சுவரில் ஏறி சென்றார்கள்.






சுவரைத் தாண்டி சென்றதும் ஹமாயக் தனக்கு பசிக்கிறது என்று சொல்ல, ஹராஹாட் “நாம் விருந்தே சாப்பிடலாம்”, என்று கூறி, இஷ்கானின் கோழிக் கூடத்திலிருந்து குண்டு கோழி ஒன்றை எடுத்து, அதை கொளுத்திய நெருப்பில் வறுத்தெடுத்து நன்றாக சாப்பிட்டார்கள். தீயை யாராவது பார்த்துவிடலாமோ என்று ஹமாயக் சிறிது கவலைபட்டான்; ஆனால் கண்ணுக்கெட்டிய தூரத்தில் காவலர்கள் யாரும் இல்லை; உணவு முடிந்ததும் அவர்கள் எலும்புகளை அப்படியே விட்டுவிடு போய்விட்டார்கள்.




ர்கள் அரண்மனைக்குள் நுழைந்தனர்,
ாஹாட் அவனை கவனமாக பின்தொடர
யாக் நேராக இஷ்கான் வசித்திருந்த
த்திற்கு சென்றான். கதவிற்கு வெளியே,
காவலன் தூங்காமல் விழித்திருப்பதற்கு ,
ன்சாப் ஒன்றை மென்று கொண்டிருந்தான்.
ாஹாட் சுவரை நோக்கி ஒரு
ாங்கல்லை வீசியதும் அந்த சப்தத்தால்
லன் திடுக்கிட்டு தன் கையிலிருந்த
ன்சாப்பை கீழே போட்டுவிட்டான். அவன்
டபத்தை சோதனை செய்துவிட்டு, சப்தம்
து கறபனையோ என்று நினைத்து
டும் தன் இடத்திற்கே சென்றான். ஆனால்
ன்சாப் இல்லாததால் ஐந்து நிமிடங்களில்
படியும் தூங்க போய்விட்டான் அந்த
லன்
ள்ளையர்கள் இஷ்கானின் அறைக்குள்
ழந்தனர். ஹராஹாட் படுக்கையை
க்கி, அவரை எழுப்பினான். அரை
கநிலையில், என்ன நடந்தது என்று
கான் கேட்க, ஒரு முக்கியமான முடிவை
க்க அவர் உதவி தேவை என்று ஹராஹாட்
னான்.



ஹராஹாட் விவரமாக அன்றைய நிக்ழ்வுகளை இஷ்கானிடம் விவரித்தான். எலிஸாவின் ரகசியத்தை அவர்கள் எப்படி கண்டு பிடித்தார்கள் என்றும், ஒரு போட்டி வைத்து அதில் வெற்றி பெறுகிறவன் அவளை திருமணம் செய்துக் கொள்வான் என்று முடிவு செய்ததையும் கூறினான்.

இஷ்கான் தான் வினோதமான பகல் கனவு ஒன்று காண்பதாக நினைத்தார். தவிர ஒரே திருடன் ஒருத்தனிடம் இருந்தே மூன்று முறைகள் அதே நகைகளை பகல்கொள்ளை செய்ததையும் ஹராஹாட் சொன்னதும், அந்த கொள்ளைக்காரன் உண்மையாகவே மிக திறமையானவன் என்று இஷ்கான் சொன்னார்.



இரவு கொள்ளைக்காரன், அவர்களை அரண்மனை சுவருக்கு மேலே கொண்டு வந்து பிறகு அரண்மனை கோழிக்கறையில் இருந்து ஒருகோழியைத் திருடி, நெருப்பை மூட்டி, கோழியை வறுத்தெடுத்ததையும், அவர்கள் கோழியைச் சாப்பிட்டுவிட்டு எலும்புகளை விட்டுச் சென்றதையும் ஹராஹாட் இஷ்கானிடம் சொன்னான். மேலும், கொள்ளையர்களுக்கு இஷ்கானின் அறையில் நுழைவதற்கான துணிச்சலும் இருந்தது என்றும் சொன்னான்.

“நம்பமுடியாது”, இஷகான்சிரித்தார். சுவரின் மேல் ஏறியபோதே அகப்பட்டிருப்பார்கள்; இல்லாவிடிலும், கோழிகளை சாப்பிடும் போதாவது நிச்சியமாகப் பிடிபட்டிருப்பார்கள்” . இது உண்மையில் நடந்திருக்காது என்று கூறினார். ஒரு வேளை நடக்காதிருந்திருக்கலாம் என்று கூறிய ஹராஹாட், அப்படி உண்மையாக நடந்திருந்தால், அறிவாளியான நீங்கள், இந்த் இருவரில் யாரை மிக்க புத்திசாலி என்று தேர்ந்தெடுப்பீர்கள் என்றுகேட்டான்.

“ஓ, சந்தேகமே இல்லாமல் நான் இரவு கொள்ளையனை தேர்வு செய்வேன் , என்று கூறிய இஷ்கான், “ஆனால் ப கல் கொள்ளையனும் மிகவும் புத்திசாலி", என்று சொல்லி இன்னொரு கனவு காண திரும்பி தூங்க சென்றார்.

மறுநாள் காலையில் இஷ்கான் இரண்டு புத்திசாலி கொள்ளைக்காரர்களைப் பற்றிய ஒரு கனவை நினைவு கூர்ந்தார். அரண்மனை வாசலுக்கு அருகே அவர்கள் கண்ட கோழி எலும்புகள் பற்றி இஷ்கானிடம் சொல்லாமல் இருப்பது நல்லது என்று இஷ்கானின் காவலர்கள் முடிவெடுத்தனர். இதற்கிடையில், ஹராஹாட் மற்றும் ஹமயாக் இருவரும், தங்கள் அழகான துரோகியான எலிஸா, அவர்கள் இருவருக்கும் தகுதியற்றவள் என்று முடிவு செய்தனர். மேலும், இந்த ஊர் அவர்களுக்கு லாபகரமான எதிர்காலத்தை வழங்க முடியும் என்று தீர்மானித்து அங்கேயே தங்கினார்கள்..



எர்ஸிங்காவில், எலிஸாவிற்கும் ஒரு புதிய எதிர்காலம் திறக்கப்பட்ட்து.

முடிந்தது